முதல்வர் அவர்கள் 129 துணை மின் நிலையங்கள் அமைக்கப்படும் என்று அறிவித்திருக்கின்றார்கள். திருசூர் பகுதியிலே இருக்கின்ற மின்னழுத்தத்தை ஆய்வு செய்து, தேவையிருப்பின், மாண்புமிகு முதல்வர் அறிவித்திருக்கிற துணை மின் நிலையங்களிலிருந்து ஒன்றைக் கொடுப்பதற்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு தயாராக இருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இடத்தைக் கொடுக்கும்பட்சத்தில், உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 193, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. பழனி, மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

193—

ஊராட்சி ஒன்றியச் சாலை

***3039—திரு. கே. பழனி:**

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஸ்ரீபெரும்புதூர் தொகுதி, குன்றத்தூர் ஊராட்சி ஒன்றியம், படப்பை முதல் ஒரத்தூர் வழியாக நீலமங்கலம் வரை ஊராட்சி ஒன்றியச் சாலை அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

ஸ்ரீபெரும்புதூர் தொகுதி, குன்றத்தூர் ஊராட்சி ஒன்றியம், படப்பை முதல் ஒரத்தூர் வழியாக நீலமங்கலம் வரையிலான ஒன்றியச் சாலை அமைக்க ஒருங்கிணைந்த ஒப்படைக்கப்பட்ட வருவாய்த் திட்டத்தின்கீழ், 3 கோடியே 24 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு, நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2017 ஜூலை 13]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. பழனி அவர்கள்.

திரு. கே. பழனி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் கதாநாயகன், நூற்றாண்டு விழா காணும் டாக்டர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) என்னை வளர்த்து ஆளாக்கிய இதய தெய்வம் கழகத்தின் காவல் தெய்வம், ஒன்றரை கோடி தொண்டர்களின் ஒப்பற்றத் தலைவர், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அம்மா அவர்கள் விட்டுச்சென்ற பணிகளை, தலைமையேற்று தொடர்ந்து செயல்படுத்திவரும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும் வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 10–15

எனது சட்டமன்றத் தொகுதியிலுள்ள படப்பை முதல் ஒரத்தூர் வழியாக நீலமங்கலம் வரை செல்லும் சாலை 7 கிலோ மீட்டர் நீளமுள்ள சாலையாகும். அந்தச் சாலை மிகவும் பழுதடைந்த நிலையிலுள்ளது. எனவே, அந்தச் சாலையைப் புதுப்பித்துத் தருவதற்காக மாண்புமிகு அமைச்சர் அவர்களை நேரில் சந்தித்து கடிதம் அளித்திருந்தேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நேரடியாக ஆய்வு செய்து, சாலையைப் புதுப்பித்துத் தருவதற்கு நடவடிக்கை எடுக்க முன்வருவாரா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஸ்ரீபெரும்புதூர் தொகுதி, குன்றத்தூர் ஊராட்சி ஒன்றியம், படப்பை முதல் ஒரத்தூர் வழியாக நீலமங்கலம் வரையுள்ள ஒன்றியச் சாலை, கடந்த 2015 ஆம் ஆண்டில் பெய்த பெருமழையினால் மிகவும் பழுதடைந்து, போக்குவரத்துக்கு மிகவும் இடையூறாக உள்ளது. இச்சாலையானது, வண்டலூர், வாலாஜாபாத் சாலை மற்றும் கூடுவாஞ்சேரியை இணைக்கும் இணைப்புச் சாலையாகும். இச்சாலை, படப்பை, ஆதனூர், பாத்திரஞ்சேரி, ஆரம்பாக்கம், நாட்டரசன்பட்டு,

சிறுவஞ்சூர், ஒரத்தூர், நீலமங்கலம், காவனூர், புகுத்தனூர் மற்றும் மாடம்பாக்கம் ஆகிய கிராமங்களுக்குப் பொது மக்கள் சென்று வருவதற்குப் பயன்படும் மிக முக்கியமான சாலையாகும். இச்சாலையின் மொத்த நீளம் 7 கிலோ மீட்டராகும்; அகலம் 3.75 மீட்டராகும். நபார்டு திட்டத்தின்கீழ் 1.26 கோடி ரூபாய் மதிப்பீட்டில் இச்சாலையில் இரண்டு பாலங்கள் கட்டப்பட்டு வருகின்றன. மேலும், இந்த 7 கிலோ மீட்டர் நீளமுள்ள சாலையை அமைப்பதற்கு ஒருங்கிணைந்த ஒப்படைக்கப்பட்ட வருவாய்த் திட்டத்தின்கீழ் 3.24 கோடி ரூபாய் மதிப்பீட்டில், மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டு வருகின்றன. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அந்தச் சாலையை உடனடியாக அமைப்பதற்கு உத்தரவிட்டுள்ளார்கள். ஆகவே, கூடிய விரைவில் அந்தச் சாலை அமைத்துத் தரப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. பழனி அவர்கள்.

திரு. கே. பழனி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்ததைப்போல, எங்கள் பகுதியிலுள்ள ஊராட்சி ஒன்றியச் சாலைகள் மிகவும் சிறப்பான முறையில் செப்பனிடப்பட்டன. அதுமட்டுமல்லாமல், படப்பை முதல் ஒரத்தூர் வழியாக நீலமங்கலம் வரையுள்ள ஒன்றியச் சாலை அமைத்துத் தரப்படும் என்று தெரிவித்த மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோன்று, இரண்டு மாதங்களுக்கு முன்பாக சென்னை மாவட்டத்தில் குடிநீர்ப் பிரச்சினை ஏற்பட்டது. அதை அறிந்த மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களும், மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்களும், என்னுடைய தொகுதியில் மாங்காடு மற்றும் குன்றத்தூருக்கு அருகில் இருக்கின்ற குவாரிகளை ஆய்வு செய்து, அதில் 22 குவாரிகளைத் தேர்வு செய்து, சென்னை மாவட்ட மக்களுக்கு உடனடியாக குடிநீர் வழங்குவதற்கு 16 கோடி ரூபாய் செலவில் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. குவாரியிலிருந்த நீரை செம்பரம்பாக்கம் ஏரியிலுள்ள சுத்திகரிப்பு நிலையத்திற்குக் கொண்டு சென்று, அங்கு சுத்திகரித்து, சென்னை மாவட்ட மக்களின் குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்த்து வைத்த மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு முதலமைச்சர்

2017 ஜூலை 13]

அவர்களுக்கும், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக நன்றியைத் தெரிவித்து அமைகின்றேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சி.வி. இராஜேந்திரன் அவர்கள்.*

திரு. சி.வி. இராஜேந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னைப் போன்ற கடைக்கோடி தொண்டர்களுக்கெல்லாம் பதவிகள் பல தந்து, இந்த மண்ணுலகைவிட்டு மறைந்து, வங்கக் கடலோரம் மீளாத் துயில் கொண்டிருக்கும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அம்மா அவர்களின் வழியில் சீரிய திட்டங்களைச் சிறப்பாகச் செயல்படுத்திக் கொண்டிருக்கின்ற தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களையும் வணங்குகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பர்கூர் சட்டமன்றத் தொகுதியில் போச்சம்பள்ளி பர்கூர் ஒன்றியத்தையும், காவேரிப்பட்டினம் ஒன்றியத்தையும் இரண்டாகப் பிரித்து, புதிய ஊராட்சி ஒன்றியம் அமைக்கப்படும் என்று மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 2011 ஆம் ஆண்டு அறிவித்தார்கள். ஆனால், இதுவரையில் அந்தப் பணி மேற்கொள்ளப்படாமல் இருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த நிதியாண்டிலாவது அந்தப் பணியைச் செய்து தரவேண்டுமென்று தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் என் தொகுதி மக்களின் சார்பாகக் கேட்டு அமைகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்வி ஊராட்சி ஒன்றியச் சாலை அமைப்பது தொடர்பாக இருந்தாலும்கூட, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு தன் தொகுதியின் மேல் இருக்கும் அக்கறையின் காரணமாக, மாண்புமிகு அம்மா அவர்கள் அறிவித்த திட்டத்தைப்பற்றி இங்கே கேட்டார். அந்த ஊராட்சி ஒன்றியங்கள் பிரிக்கப்பட்டு, வருகின்ற உள்ளாட்சித் தேர்தலின்போது புதிய ஊராட்சி ஒன்றியம் செயல்பாட்டிற்கு வரும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதற்கான நடவடிக்கைகள்*

எடுக்கப்பட்டு வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க, இன்னும் தீவிரமாக நடவடிக்கை எடுக்கப்படும். இதுமட்டுமல்லாமல், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், இதுபோன்று வேறு எந்தெந்த ஊராட்சி ஒன்றியங்கள் பிரிக்கப்பட வேண்டுமென்று, மானியக் கோரிக்கைகள் தொடர்பாக நடைபெற்ற ஆய்வுக் கூட்டத்தின்போது கேட்டறிந்தார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட அந்த இரண்டு ஊராட்சி ஒன்றியங்களும் பிரிக்கப்பட்டு, புதிய ஊராட்சி ஒன்றியம் அமைப்பதற்கு கூடிய விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10–20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. தா.மோ. அன்பரசன் அவர்கள்.*

திரு. தா.மோ. அன்பரசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை புறநகர்ப் பகுதிகளில் இருக்கின்ற ஊராட்சிகள், குறிப்பாக, ஐயப்பன்தாங்கல், கோவூர், மௌலிவாக்கம், தண்டலம், இரண்டாங்கட்டளை போன்ற பகுதிகளில் கடந்த மழையின் காரணமாக சாலைகள் எல்லாம் கடுமையாக பாதிக்கப்பட்டு *பழுதுபட்ட நிலையில் இருக்கின்றன. சம்பந்தப்பட்ட பஞ்சாயத்துகளில் பணம் இல்லாத காரணத்தினால், அந்தச் சாலைகளைப் போட இயலவில்லை. எனவே, அதுபோல் *பழுதுபட்ட சாலைகளை ஊராட்சி ஒன்றியப் பொது நிதியிலிருந்து செப்பனிடுவதற்கு அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன ** என்ற அந்த வார்த்தையினை 'பழுதுபட்ட' என்று மாற்றிக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

---

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க மாற்றப்பெற்றது.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

LEGISLATIVE ASSEMBLY TAMIL NADU
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

2017 ஜூலை 13]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவ்வாறே மாற்றப்படுகிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆட்சிக் காலத்தில், 2015–ல் பெருவெள்ளம் வந்தபோது, அந்தப் பகுதிகளில் இருக்கின்ற சாலைகள் எல்லாம் சேதமடைந்தன. மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்தில்தான் ஊராட்சி, பேரூராட்சி, நகராட்சி, மாநகராட்சி போன்ற அனைத்துப் பகுதிகளிலும் சாலைகள் அமைப்பதற்காக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. எங்களது உள்ளாட்சித் துறையில் மட்டும் கிட்டத்தட்ட 65,302 கி.மீ. அளவிற்கு சாலைகள் அமைக்கப்பட்டு, அதற்காக 17,972 கோடி ரூபாய் நிதியும் ஒதுக்கப்பட்டது. இது இந்தியாவிலேயே வேறு எங்கும் கிடையாது. அந்த அளவிற்கு ஊராட்சிச் சாலைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்தது மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மட்டும்தான். அதுபோல் கடந்த தி.மு.க. ஆட்சியில், 5 வருடங்களுக்கு முன்பு, இந்தப் பணிக்கு 6,873 கோடி ரூபாய்தான் ஒதுக்கியிருந்தார்கள். இன்றைக்கு நீங்கள் குறிப்பிட்டிருக்கின்ற அந்த கிராமச் சாலைகள் இதற்கு முன்பு 1 இலட்சம் கி.மீ. நீளமுள்ளவையாக இருந்தன. தற்போது 45,000 கி.மீ. நீளத்திற்கு கூடுதலாக புதியதாக சாலைகளை உருவாக்கித் தந்தவர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். இது இந்தியாவில் வேறு எந்த மாநிலத்திலும் கிடையாது. கிட்டத்தட்ட 1½ இலட்சம் கி.மீ. நீளமுள்ள சாலைகளாக இன்றைக்கு உயர்த்தப்பட்டுள்ளன. அந்த அளவிற்கு புதியதாக கிராம சாலைகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட அந்தச் சாலைகள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்று கண்டிப்பாக சீரமைக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. க.நா. விஜயகுமார் அவர்கள்.

திரு. க.நா. விஜயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்கள் இருக்கும் திசை நோக்கி வணங்கி, அம்மா அவர்கள் வழியில் நல்லாட்சி நடத்திவரும் தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் அவர்களையும் வணங்குகிறேன். திருப்பூர் வடக்கு தொகுதி,

திருப்பூர் ஊராட்சி ஒன்றியம், வள்ளிபுரம் கிராமத்தில் மாண்புமிகு அம்மா அவர்கள் அறிவித்த பசுமை வீடுகள் திட்டத்தின்கீழ் 10,000 வீடுகளில், 507 வீடுகள் ரூ.13 கோடியில் கட்டிமுடிக்கப்பட்டு அந்தப் பகுதியில் நெசவாளர்கள் பொது மக்கள் அனைவரும் குடியேறிவிட்டார்கள். அந்தப் பகுதியினை சென்ற ஆண்டு நமது மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் அவர்களும், மாண்புமிகு வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்களும் பார்வையிட்டார்கள். அப்பகுதியில் கிட்டத்தட்ட 4 கி.மீ. தூரத்திற்கு சாலைகளை அமைக்க வேண்டியுள்ளது. அந்தப் பணியினைச் செய்து தருவதாக உறுதியளித்துவிட்டு வந்தார்கள். இன்னும் அந்தப் பணிகள் நடைபெறவில்லை. எனவே, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள், அந்தச் சாலையினை அமைத்து, நெசவாளர்களின் கோரிக்கையை நிறைவேற்றித் தருவார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட அந்தச் சாலையினை துறை அதிகாரிகள்மூலம் ஆய்வு செய்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு சென்று, உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 194, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி.பி. சாமி, மாண்புமிகு மீன் வளம், நிதி, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்.

194—

மீனவர்களுக்கான உதவித் தொகை

***4297—திரு. கே.பி.பி. சாமி:**

மாண்புமிகு மீன் வளம், நிதி மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—